**நாமல்ஓயா பிரதேச சபை**

**அம்பாறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மார்ச் 28 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 03 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 சனவரி 06 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நாமல்ஓயா பிரதேச சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

2014 சனவரி 27 ஆந் திகதிய பீஎல்/05/பீடீ/இபொகநி ஆம் இலக்க உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சுச் செயலாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் பின்பற்றப்பட்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) பொல்வத்தை வெள்ளிக்கிழமை வாராந்த சந்தையை வாடகைக்கு வழங்கியதற்காக 2010 ஆம் ஆண்டிற்காக அறவிடவேண்டிய நிலுவை வாடகை ரூபா 15,008 தொகை ஐந்தொகையில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் 301 செலவின தலைப்பின் கீழ் சம்பளம் மற்றும் படிச் செலவினம் ரூபா 1,206,770 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களுக்கு ரூபா 1,196,770 ஆகக் கொண்டுவரப்பட்டிருந்தது. அதன் காரணமாக மீளாய்வாண்டின் செலவினம் ரூபா 10,000 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) நெல்சிப் செயற்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணங்களுக்காக செய்யப்பட்ட கொடுப்பனவுகளில் நிறுத்தி வைக்கப்பட்ட ரூபா 1,811,108 பணம் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) பிரதேச் சபை விதிக் கோவை | |
| (i) விதி - 02 | சபையினால் விதிக்கப்பட்ட கைத்தொழில் வரி செலுத்துமாறு குறிப்பிட்டு பி.எஸ். 26 பீ படிவத்தின் பிரகாரம் அறிவித்தலொன்று நிர்மாண வரி அறிக்கைப் பதிவேட்டில் பெயர் குறிப்பிடப்பட்ட நபருக்கு அனுப்பி வைக்கமுடியுமாக இருந்த போதிலும் செயலாளரால் கைத்தொழில் வரி செலுத்துமாறு அறிவித்தல் விடுவிக்கப்பட்டிருக்க வில்லை. |

(ii) விதி - 180

காசு, களஞ்சியம் மற்றும் வருமான சேகரித்தல் போன்ற நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக செயற்படுகின்ற உத்தியோகத்தர்களினால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய பிணை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) விதி - 203

ஆதனங்களை மெய்மையாய்வு செய்வதற்காக சபையின் பிரதிநிதியொருவரையும் உள்ளடக்கும் வகையில் மெய்மையாய்வுச் சபையொன்று நியமிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் சபையின் பிரதிநிதியொருவரும் இன்றி மெய்மையாய்வுச் சபை நியமிக்கப்பட்டிருந்தது.

(iv) விதி - 218

காணியும் கட்டிடங்களும் ஒவ்வொரு வருடமும் மெய்மயாய்வுச் சபையின் மூலம் மெய்மையாய்வு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் சபைக்குரிய ரூபா 14,125,435 தொகையான காணியும், கட்டிடங்களும் தொடர்பாக மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்

-----------------------------------------------

(i) நிதிப்பிரமாணம் 571

03 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக முன்கொண்டுவரப்பட்டிருந்த ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 12,215 தொகை, அம்பாறை பிரதேச செயலாளருக்குச் செலுத்த வேண்டிய ரூபா 30,000 மற்றும் நாமல்ஓயா பிரதேச சபையின் செயலாளருக்கு செலுத்த வேண்டிய ரூபா 2,298 தொகையான பொது வைப்புக்களை தீர்ப்பதற்கோ அல்லது தேவையான நடவடிக்கைகளோ எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| | | |
|---|---|---|
| (ii) | நிதிப்பிரமாணம் 1646 | சபையினால் பயன்படுத்தப்படுகின்ற 08 வாகனங்களுக்குரிய ஓட்ட அட்டவணை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | PF 434 ஆம் இலக்க அரசாங்க நிதித் திணைக்களத்தின் சுற்றறிக்கை | அரசாங்கத்தின் காப்புறுதி நிறுவனத்திலிருந்து மோட்டார் வாகனங்களுக்கு காப்புறுதி செய்ய வேண்டியிருந்த போதிலும் சபையின் கெப் வாகனம் ரூபா 86,564 தெகையில் உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் எழுத்துமூல சிபாரிசு மற்றும் சபையின் அங்கீகாரத்தின் கீழ் தனியார் நிறுவனத்திலிருந்து காப்புறுதி செய்யப்பட்டிருந்தது. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 406,915 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 12,730 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவில் ரூபா 419,345 அதிகரிப்பொன்று காணப்பட்டது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | 2013 திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | ------------------ | ------------- | ------------- | ------------- |
| | | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 10,000 | 39,360 | - |
| (ii) | வாடகை | 921,540 | 739,867 | 25,799 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 357,300 | 251,400 | - |
| (iv) | சேவைக்கான கட்டணம் | 80,250 | 66,944 | - |
| (v) | பிடியாணைக் கட்டணமும் தண்டப்பணமும் | 706,500 | 994,957 | 498,203 |
| (vi) | ஏனைய வருமானம் | 453,500 | 174,618 | - |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் செயற்பாட்டுச் செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபையின் பணிகளுக்காக ஈடுபடுத்தப்பட்ட இரண்டு கெப் வண்டிகள், மூன்று டெக்ரர்கள், இரண்டு டோலர்கள் என்பவற்றின் உரித்து வேறு நிறுவனங்களின் பெயரில் காணப்படுவதுடன் அவைகளின் உரித்தை சபைக்குக் கையேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) விளம்பர அறிவித்தல் மற்றும் பதாதைகளிலிருந்து வருமானங்களைச் சேகரிப்பதற்குத் தேவையான உப விதிகள் அங்கீகரிக்கப்படாமையினால் அந்த வருமான வழிகளிலிருந்து ஆண்டிற்கு உழைக்கக்கூடிய ரூபா 30,000 இற்கு மேற்பட்ட வருமானமொன்றை சபை இழந்திருந்தது.

(இ) பிரதேச சபைக்குரிய வீதிகள் தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. அதனால் வீதியைப் பராமரித்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் தொடர்பாக கணக்காய்வின் போது மதிப்பீடொன்றை மேற்கொள்ளல் கஷ்டமானதாக இருந்தது.

(ஈ) வங்கிக் கணக்கொன்றில் உரிய வங்கியினால் பத்து வருடங்களுக்கு முன்னர் பிழையாக வரவு வைக்கப்பட்ட ரூபா 23,000 தொகையினை அறவிடுவதற்கு 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டின் போதும் தொலைந்துபோன 1247 நூலகப் புத்தகங்களில் இனங்காணப்பட்ட புத்தகங்களின் பெறுமதி ரூபா 121,296 ஆக இருந்ததுடன் தொலைந்து போணமை தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2011 ஆம் ஆண்டிற்கு முன்னர் சபைக்குக் கிடைத்த ரூபா 1,000 இற்காக சபையின் உத்தியோகத்தரினால் பற்றுச்சீட்டு விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும் அந்தப் பணம் வங்கியிலிடப்படாமை தொடர்பாகவும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் பாதீட்டு செலவினத்திற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே 20 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) சொத்துக்கள் கட்டுப்பாடு
(இ) வருமான அறவீடு